அதுபற்றி பேசுகிறார்கள். நான் இந்த நேரத்தில் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், நீங்கள் கொடுக்கிற தீர்ப்புகள் உங்கள் நடைமுறைக்கு முரண்பட்டதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்? அதைச் சொல்லிவிட்டுப் போங்கள். வேறு என்ன? தீர்ப்பு சரியில்லை என்று சொன்னால் சொல்லிவிட்டுப் போங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இவ்வளவு சொல்கிறேன், சூடுபடவில்லை. என் கட்சியைச் சேர்ந்தவர் பேசியிருக்கிறார்கள். அவரை வெளியே போகவேண்டுமென்று அனுப்பியிருக்கிறீர்கள். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. அதேநேரத்தில் மற்ற உறுப்பினர்கள் மத்தியில் நீங்கள் எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்று பார்க்கும்போது அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒன்றை எழுப்புகிறார்கள் என்றால் அதிலும் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றை எழுப்புகிறார் என்றால் உண்மையில் ஆளும் கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி என்ற முறையில் நீங்கள் நடந்து கொள்வதை எதிர்த்து நாங்கள் எல்லோரும் வெளிநடப்பு செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

THIRU B. VENKATASWAMY : Sir, as there is no security for the Members, the Members of the Swatantra Party are also staging a walk-out.

(Then the Members belonging to the Swatantra Party staged a walk-out.)

3. அவையுரிமைத் தீர்மானம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியேற வேண்டுமென்று தாங்கள் தீர்ப்பளித்ததற்குப் பிறகு அவர்கள் வெளியேறுகிறபோது 'கவர்ட்', 'கவர்ட்', 'கவர்ட்'

1973 நவம்பர் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று மூன்று முறை சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்கள். அது இந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்கிற ஒன்று என்பதால் அதை ஒரு உரிமைப் பிரச்னையாக ஏற்றுக்கொண்டு உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும்' என்று அவையின் சார்பாக முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது.

(2) அவையுரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திருமதி த. ந. அனந்தநாயகியின் வீட்டிற்கு முன் நடந்த ஆர்ப்பாட்டம் குறித்து—தொடர்ச்சி.

திரு. எம். ஏ. லத்திப்: தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னைகள் என்ற அளவில் குறிப்பிட்ட சில பிரச்னைகளை குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டு இந்த அவைமுன் கொண்டுவரும்போது உரிமைப் பிரச்சினையை யார் எழுப்புகிறாரோ அவர்கள் அதற்கான 'ப்ரைமா பேசி கேஸ்' இருக்கிறதா, உரிமைப் பிரச்னையை எழுப்புவதற்கு முகாந்திரம் இருக்கிறதா என்று அவர் தன்னுடைய வாதங்களை எடுத்துச்சொன்ன பிறகு பேரவைத் தலைவர் அவர்கள் முகாந்திரம் இருக்கிறது என்று கருதினால்தான் அதன் மீது ஒரு விவாதம் அல்லது மற்றவர்கள் கருத்துக்களைக் கேட்டுக் கொள்வது இந்த அவையின் மரபாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் அவர்கள் சட்டசபை உறுப்பினராக இருக்கலாம். அவர்கள் வீட்டுக்கு முன் யாரோ ஒரு சிலர் சென்று சில ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. சிந்தனைச் சேனை என்ற பெயரால் உள்ள அந்தக் குழு அரசாங்க சார்புடையது, அரசாங்கத்தால் நடத்தப்படுகிற ஒரு குழு என்ற அளவில் இங்கு சொல்லப்படுகிறது. யாரோ தனிப்பட்ட ஒருசிலர் அந்தக் குழுவை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு அரசியல் இயக்கமாக இயங்கும்போது அரசியல் கட்சி ஒன்றைச் சார்ந்த தலைவி என்ற முறையில் சிலர் அவர்கள் வீட்டுமுன் சென்று தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்